# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## June 11, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. பிரதமர் பதவியில் 4,399 நாள்களை புதன்கிழமையுடன் (ஜூன் 10) நிறைவு செய்தார் நரேந்திர மோடி. இதன் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ந்து நீண்ட காலம் பதவி வகித்த பிரதமர் என்ற ஜவாஹர்லால் நேருவின் சாதனையை பிரதமர் மோடி விஞ்சியுள்ளார்.

(i) இந்தச் சாதனைக்காக, அவருக்கு மத்திய அமைச்சர்கள், பாஜக ஆளும் மாநில முதல்வர்கள், கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள், பிற அரசியல் தலைவர்கள் மட்டுமன்றி உலகத் தலைவர்கள் பலரும் வாழ்த்துத் தெரிவித்தனர்.

(ii) நேருவை விஞ்சிய மோடி:

- சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான ஜவாஹர்லால் நேரு கடந்த 1947, ஆகஸ்ட் 15 முதல் 1964, மே 27-இல் காலமாகும் வரை அந்தப் பதவியை வகித்தார். 16 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து பிரதமராக இருந்த அவர், நாட்டின் நீண்ட கால பிரதமர் என்ற பெருமைக்குரியவர்.
- 1947 முதல் 1952 வரை இடைக்கால அரசுக்கு நேரு தலைமை தாங்கினார். கடந்த 1952-இல் முதலாவது மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு அவர் தொடர்ந்து பிரதமராகப் பதவி வகித்த காலம் 4,398 நாள்களாகும்.
- தற்போது நாட்டின் பிரதமராகப் பதவி வகித்துவரும் மோடி, தனது பதவிக்காலத்தில் 4,399 நாள்களை புதன்கிழமையுடன் நிறைவு செய்தார். இதன்மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ச்சியாக நீண்ட காலம் பதவி வகித்த பிரதமர் என்ற பெருமை நேருவிடம் இருந்து மோடி வசமாகியுள்ளது.
- முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி, நாட்டின் பிரதமராக 15 ஆண்டுகளுக்கு மேல் பதவி வகித்துள்ளார். எனினும், அவர் தொடர்ச்சியாக வகிக்கவில்லை.

2. திரைப்பட இயக்குநர் பாரதிராஜா (84) உடல்நலக் குறைவு காரணமாக சென்னையில் புதன்கிழமை (ஜூன் 10) காலமானார். அவரது உடலுக்கு முதல்வர் ச.ஜோசப் விஜய் உள்பட அரசியல் கட்சித் தலைவர்கள், திரை பிரபலங்கள் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

(i) அவரது படைப்புகளுக்காக 2004- இல் பத்மஸ்ரீ விருது வழங்கி மத்திய அரசு அவரை கௌரவித்தது. 2009- இல் இலங்கையில் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்தபோது, தமிழர்களுக்கு நீதி கேட்டு பத்மஸ்ரீ விருதை திரும்ப ஒப்படைப்பதாக பாரதிராஜா தெரிவித்தார். இதை மத்திய அரசு ஏற்றுக்கொண்டது.

3. கால்பந்து சர்வதேச சங்கங்களுக்கான சம்மேளனத்தின் (ஃபிஃபா), 23-ஆவது உலகக் கோப்பை கால்பந்து போட்டி, மெக்ஸிகோவில் வியாழக்கிழமை (ஜூன் 11)

தொடங்குகிறது. அடுத்தடுத்த நாள்களில், கனடா, அமெரிக்காவில் தொடர்கிறது.

(i) இந்திய நேரப்படி வியாழக்கிழமை நள்ளிரவு தொடங்கும் முதல் ஆட்டத்தில் மெக்ஸிகோ - தென்னாப்பிரிக்கா அணிகள் மோத, அடுத்த ஆட்டத்தில் தென் கொரியா - செக் குடியரசு சந்திக்கின்றன.

(ii) உலகிலேயே அதிகமான ரசிகர்களைக் கொண்டிருக்கும் விளையாட்டான கால்பந்தில், முக்கிய திருவிழாவாக 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை உலகக் கோப்பை போட்டி நடைபெறுகிறது. அந்த உலகக் கோப்பை போட்டி, வியாழக்கிழமை (ஜூன் 11) தொடங்கி, ஜூலை 19-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

(iii) அமெரிக்கா, கனடா, மெக்ஸிகோ ஆகிய 3 நாடுகளில், மொத்தம் 16 நகரங்களில் இப்போட்டியின் ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. உலகக் கோப்பை வரலாற்றில் இதுவே மிகப்பெரிய போட்டி.

(iv) போட்டியின் வரலாற்றிலேயே முதல்முறையாக, 48 அணிகள் பங்கேற்பதும், 3 நாடுகளில் போட்டி நடத்தப்படுவதுமே இந்த உலகக் கோப்பை போட்டியின் பிரதான சிறப்புகள். அத்துடன், ரவுண்ட் ஆஃப் 32 சுற்று புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது.

(v) நடப்பு சாம்பியன் ஆர்ஜென்டீனா, அதிகமுறை சாம்பியனான பிரேஸில் ஆகியவற்றுடன் ஜெர்மனி, இத்தாலி உள்பட பல பிரபலமான அணிகள் இந்த முறையும் களம் காண்கின்றன. அதுதவிர, கேப் வெர்டே, கியுராகாவ், ஜோர்டன், உஸ்பெகிஸ்தான் ஆகிய 4 அணிகள் முதல்முறையாக உலகக் கோப்பை போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

4.கடந்த உலகக் கோப்பை போட்டியில்

2022 - கத்தார்

சாம்பியன் - ஆர்ஜென்டீனா (3-ஆவது முறை)

ரன்னர் அப் - பிரான்ஸ்

3-ஆம் இடம் - குரோஷியா

அதிக கோல்கள் - கிலியன் பாபே (8/பிரான்ஸ்)

சிறந்த வீரர் - லயனல் மெஸ்ஸி (ஆர்ஜென்டீனா)

இதுவரை சாம்பியன்கள்...

- பிரேஸில் 5 முறை (1958, 1962, 1970, 1994, 2002)
- ஜெர்மனி 4 முறை (1954, 1974, 1990, 2014)
- இத்தாலி 4 முறை (1934, 1938, 1982, 2006)
- ஆர்ஜென்டீனா 3 முறை(1978, 1986, 2022)
- பிரான்ஸ் 2 முறை ( (1998, 2018)

- உருகுவே 2 முறை (1930, 1950)
- இங்கிலாந்து 1 முறை (1966)
- ஸ்பெயின் 1 முறை (2010)

5. இந்திய கடற்படைக்கு ரூ.449 கோடியில் உளவு செயற்கைக்கோள்களை முடக்கும் 20 ஜாமர் கருவிகளை பெங்களூரு நிறுவனத்திடம் இருந்து வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் பாதுகாப்பு அமைச்சகம் கையொப்பமிட்டுள்ளது.

(i) மத்தியில் ஆளும் பிரதமர் மோடி தலைமையிலான அரசு, தொடர்ந்து முப்படையையும் நவீனமயமாக்கும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, இந்திய கடற்படை கப்பல்களை எதிரி நாடுகளின் உளவு செயற்கைக் கோள்கள் கண்காணிப்பில் இருந்து காக்கும் வகையில் புதிய ஜாமர் கருவிகளை வாங்க தீர்மானித்துள்ளது. இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் கூறியதா வது:

- கடற்படை கப்பல்களைக் கண்காணிக்கும் செயற்கைக்கோள் அமைப்புகளை முடக்கும் ஜாமர் கருவிகளை இந்திய கடற்படைக்கு வாங்க பாதுகாப்பு அமைச்சகம் முடிவு செய்துள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில் பெங்களூரைச் சேர்ந்த ஏஎஸ்எஸ்பிஎல் என்ற நிறுவனத்துடன் பாதுகாப்பு அமைச்சகம் கையொப்பமிட்டுள்ளது. உள்நாட்டு வடிவமைப்பு, உரு வாக்கம், உள்நாட்டு தயாரிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் திட்டத்தின்கீழ் இந்த ஒப்பந்தம் கையொப்பமாகியுள்ளது.
- அந்த ஒப்பந்தத்தின் கீழ் மொத்தம் 20 ஜாமர் கருவிகள் வாங்கப்படவுள்ளன. இந்தக் கருவிகளில் உள்ள சாதனங்கள் 75 சதவீதம் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டவை. இந்த ஜாமர் கருவிகள், இந்திய கடற்படையில் சேர்க்கப்படுவது நமது நாட்டின் கடற்படைக்கு கூடுதல் பலத்தை தரும். இந்திய கடற்படைக்குச் சொந்தமான கப்பல்கள், பிற நாடுகளின் உளவு செயற்கைக்கோள்கள் கண்காணிப்பில் சிக்காமல் கடலில் சுதந்திரமாகப் பயணிக்க வழிவகை ஏற்படும் எனத் தெரிவித்தனர்.

6. நுண்நிதி நிறுவனங்களுக்கான (எம்எஃப்ஐ) கடன் உத்தரவாத திட்டத்தை நீட்டித்து மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதுதொடர்பாக மத்திய நிதியமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

(i) நிகழாண்டு ஆகஸ்ட் 31 வரை அல்லது ரூ.20,000 கோடி மதிப்பிலான உத்தரவாதங்கள் அளிக்கப்படும் வரை, இதில் எது முதலில் வருகிறதோ அதுவரை நுண்நிதி நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத திட்டம்-2.0-ஐ நீட்டிக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(ii) அத்துடன் பெரிய அளவில் வங்கி அல்லாத நிதி நிறுவனமாக செயல்படும் நுண்நிதி நிறுவனங்கள், பிற நுண்நிதி நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் அதிகபட்ச கடன் வரம்பை ரூ.300 கோடியில் இருந்து ரூ.1,000 கோடியாக அதிகரிக்கவும் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஒரு நிதி நிறுவனம்

நிர்வகிக்கும் அனைத்து சொத்துகளின் மொத்த சந்தை மதிப்பில் 20 சதவீதம் என்ற ஒட்டு மொத்த உச்சவரம்பின் கீழ், இந்தக் கடன் வரம்பை அதிகரிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

(iii) இந்த நடவடிக்கைகள் திட்டத்தை சிறப்பாகப் பயன்படுத்தவும், நுண்நிதி நிறுவனங்களுக்கு கடன் கிடைப்பதை அதிகரிக்கவும் வழிவகுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. இந்தியாவில் ஜவுளி, எஃகு துறைகளில் சந்தை தேவையைவிட அதிகம் உற்பத்தி செய்யப்படுவதாக எழுந்த குற்றச்சாட்டை மத்திய வர்த்தக அமைச்சகம் நிராகரித்துள்ளது. இதுகுறித்து புது தில்லியில் அந்த அமைச்சகத்தின் கூடுதல் செயலர் அமிதாப் குமார் செய்தியாளர்களிடம் புதன்கிழமை கூறியதாவது:

(i) இந்தியாவில் ஜவுளி துறையில் சந்தை தேவையைவிட அதிகம் உற்பத்தி செய்யப்படுவதில்லை. அதேவேளையில், உலகில் எஃகு உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. ஆனால் இந்தத் துறைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் தனிநபர் நுகர்வு உலகிலேயே இந்தியாவில் தான் மிகக்குறைவாக உள்ளது என்று தெரிவித்தார்.

(ii) நியாயமற்ற அரசு மானியங்களும், கட்டமைப்பு ரீதியில் அதிகப்படியான உற்பத்தித் திறனும் உலகளாவிய சந்தைகளைச் சிதைத்து, அமெரிக்க தொழில்களுக்குத் தீங்கு விளைவிக்கிறதா என்பதை கண்டறிய, இந்தியா உள்பட 15 நாடுகள் மற்றும் ஐரோப்பிய யூனியனுக்கு எதிராக அமெரிக்க வர்த்தக பிரதிநிதி (யுஎஸ்டிஆர்) அலுவலகம் கடந்த மார்ச்சில் விசாரணையைத் இந்த நாடுகள் மற்றும் ஐரோப்பிய யூனியனின் உற்பத்தி நடைமுறைகளை குறிவைத்து இந்த விசாரணை தொடங்கப்பட்டது.

(iii) எனினும் இந்த விவகாரத்தில் யுஎஸ்டிஆரின் குற்றச்சாட்டுகளை இந்தியா நிராகரித்தது.

(iv) அமெரிக்க சந்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவைத் தாண்டி, இந்தியாவின் முக்கிய தொழில் துறைகளில் அதிகம் உற்பத்தி செய்யப்பட்டு, அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால், அங்கு வர்த்தக உபரி ஏற்படுவதற்கு உரிய ஆதாரத்தை யுஎஸ்டிஆர் அளிக்கவில்லை என்று இந்தியா தகவல் தெரிவித்துள்ளது. இந்தச் சூழலில், கூடுதல் செயலர் அமிதாப்குமாரின் கருத்து முக்கியத்துவம் பெற்றுள்ளது.